கூட்ட எண் 04
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 20..06.2018.

**2018-ம் ஆண்டு ஜீன் மாதம் 20.06.2018 ந் தேதி புதன் கிழமை மாலை 4.00மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

**1.** இந்நகராட்சி பகுதியில் மொத்த தெருக்களும், 15061 SBM கணக்கெடுப்பு குடியிருப்புகளும், 33 வார்டுகளையும் கொண்டதாகும். தெருக்களின் நீளம் 58,710 கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியில் 33 வார்டுகளில் உருவாகும் தினசரி திடக்கழிவுகளின் அளவு 27MT ஆகும். இந் நகருக்கு தினசரி பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து செல்வோர் எண்ணிக்கை சுமார் 10000 ஆகும். தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நகரப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் - 2011 - இன்படி, தூய்மைப் பணி சிறப்பு கவனம் செலுத்தி நகரினை தூய்மையாக பராமரிப்பது மற்றும் தினசரி உருவாகும் குப்பைகளை உருவாக்கும் இடத்திலேயே தரம் பிரித்து சேகரம் செய்து வாங்குதல், மக்கும் குப்பைகளை சேகரித்து உரம் தயாரித்தல், மக்கா குப்பைகளை சேகரித்து மறுசுழற்ச்சிக்கு கொண்டு செல்லுதல், கழிப்பறை கட்டுவதற்கு இடவசதி இல்லாத குடியிருப்புகளில் உள்ள நபர்கள் சமுதாய கழிவுகள் பயன்படும் வகையில் தினசரி தூய்மைபடுத்துதல், நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மாணவர்கள் தினசரி பயன்படுத்தும் வகையில் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுவதற்கு துப்புரவு பணியாளர்கள் தற்போது போதுமானதாக இல்லை. நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட துப்புரவு பணிகள் மொத்தம் 143, தற்போது காலிப்பணியிடங்கள் 48, பணியில் உள்ள துப்புரவு பணியாளர்கள் 95, தூய்மை இந்தியா இயக்கம் சிறப்பாக நகராட்சியில் செயல்படுத்திட துப்புரவு பணியிடங்கள் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. எனவே, தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்திட வேண்டிய தேவையான துப்புரவுப் பணியாளர்கள் 48 நபர்களை தனியார்மயம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் எடுத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களின் அனுமதி கோரி பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 892/2018/எச்1)

2. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 63263 மக்கள் தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால், இந் நகரில் தினமும் சுமார் 27 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது வேலப்பாடி கிராமத்தில் உள்ள உரக் கிடங்கில் (சுமார் 2.80 ஏக்கர்) கொட்டப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 22 தள்ளுவண்டிகள், 5 மூன்று சக்கர வண்டிகள் மூலம் சுமார் 42% வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் எனப் பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 4.7 மெட்ரிக் டன் (10 விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காள் ஓடுகள், மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும், மேலும், அப்புறப்படுத்துவதிலும், சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்ட வெயேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆலோசித்த போது மேற்கண்ட எரியக் கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் (கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம் ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்டராடெக் சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக் கூடிய திடக் கழிவுகளை கையாளக் கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும், இது சம்மந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும், மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தர வேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இது சம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

ஆரணி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக் கூடிய தன்மையுடைய 6 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே, அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும், அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்கதற்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. ஆரணி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும், மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம். 2. பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதறக்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1467/எச்1/2018)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.

கூட்ட எண் 05
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 29..06.2018.

**2018-ம் ஆண்டு ஜீன் மாதம் 29.06.2018 ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

**1.** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AU6961 வருடாந்திர இன்சூரன்ஸ் காலம் வரும் 22.06.2018அன்றுடன் நிறைவடைகிறது. எனவே, 23.06.2018 முதல் 22.06.2019 வரை ஓராண்டு காலத்திற்கு இன்சூரன்ஸ் மீண்டும் தொடர ரூ.18,260/- தி.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் செலுத்த மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி, நிறுவனத்திற்கு இன்சூரன்ஸ் தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/இ1/2016)

4 ஆரணி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதாரப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2019 வரை உள்ள காலத்திற்கு சாலை வரி, பசுமைவரி, மற்றும் இதர கட்டணங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆலுவலகத்தில் (சேவூர்) செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச தோராய செலவினத் தொகை ரூ. 45000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

5. ஆரணி நகராட்சி பொறியியல் பிரிவில் கையிறைப்பான் உதிரி பாகங்கள், சிறுமின்விசை பம்பின் உதிரி பாகங்கள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் அனைத்தும் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, இந்த உதிரிபாகங்ளை பொது ஏலத்தில் விட மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் (கோப்பு எண் 761/இ1/2018)

6. ஆரணி நகராட்சி வார்டு எண் 30 வி.ஏ.கே நகரில் பிள்ளையார் கோயில் அருகில் அமைந்துள்ள சிறுபாலம் உடைந்த மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இதனால், பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, மேற்படி சிறுபாலத்தை புதியதாக அமைக்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 60000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம் (கோப்பு எண் 761/இ1/2018)

7. ஆரணி நகராட்சி அருகில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் அலுவலக வளாகம் ஆகிய இடங்களை மாண்புமிகு சுகாதார அமைச்சர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பார்வையிடப்பட்டது. அச்சமயம் மேற்படி இடங்களில் உள்ள முட்புதர்கள் மற்றும் மேடுபள்ளங்களை சமன் செய்து அப்பகுதியை சுத்தம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்படி இடங்களை தனியார் JCB இயந்திரம் கொண்டு பணியினை செய்ய ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 50000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/,1/2018)

8. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14 திருவள்ளுவர் தெரு மற்றும் வார்டு எண் 25 சீத்தாராமன் தெரு ஆகிய இடங்களில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் மிகவும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளதாலும், மேலும், அப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிப்பறை உள்ளதாலும், மேற்படி, இரண்டு சமுதாய கழிப்பிடங்களை தரைமட்டமாக இடித்து விட்டு சமன் செய்திட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரி பணியினை செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

9. ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள வெங்கட்ராமன் பூங்கா, பாஸ்கர் நகர் பூங்கா மற்றும் வீ.ஏ.கே நகர் பூங்கா ஆகியவைகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரிக்க சிமெண்ட் கான்கிரீட்டிலான தொட்டிகள் 02 வீதம் 6 எண்ணிக்கை அமைத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி, பணி தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் செயல்படுத்த வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. P. சந்திரசேகர் வசம் ஒப்படைப்பு செய்து பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

10. ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள எருகிடங்கில் தினசரி சேகரமாகும் குப்பைகள் கொட்டிவருவதால், வழிமுழுவதும் மலைபோல் குவிந்துள்ளது. எனவே மேற்படி குப்பை மேடுகளை பொக்லைன் மூலம் சமன் செய்து குப்பைகள் கொட்ட வேண்டியுள்ளதால், அதற்கு ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் செய்ய உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரி பணியினை செய்து முடிக்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

11. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/3725/2017 நாள் 25.06.2018ல் ஆரணி நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி கே. கே. நக்ர விரிவு மற்றும் ஜெயம் நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 985000/- |
| 2 | ஆரணி நகராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் அறை அமைத்தல் | 425000/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும், இப்பணி திட்டப் பணி என்பதால், உடன் செய்து முடித்து பயனீட்டு சான்று, பணிமுடிவு அறிக்கை ஆகியவை அனுப்ப வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1547/இ1/2018)

12. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செ.மு.எண் 3343/2017/அ7 நாள் 20.06.2018ல் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017 - 2018ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| SL No. | Name of the Work | Estimate Amount (Rs.in Lakhs) | Implementing Agency |
|---|---|---|---|
| 1 | Construction of Modernized GYM Building in Arani Municipality | 50.00 | Commissioner, Arani Municipality |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். மேலும் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 939/இ1/2017)

13. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண் 12981/2018/இ3 நாள் 27.06.2018ல் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018-19ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ரூ. கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | மாநில நிதிக்குழு/ மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| ஆரணி | 1.00 | 0.38 | 0.30 | 0.22 | 0.10 |

மேலும், மேற்படி நிதி ஒதுக்கீடு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள குறிப்பிட்டுள்ள மதிப்பீடு தொகைக்கு நகர்மன்றத்தில் தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்கத் தெரிவித்து வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 1113/இ1/2018)

14. ஆரணி நகராட்சி பகுதிகளில் 15 இடங்களில் உள்ள உயர்கோபுர மின்விளக்குகள் தற்போது பழுதுகள் ஏற்பட்டு எரியாமல் உள்ளது. இதனால் அப்பகுதி பொது மக்களுக்கு இரவில் போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது. மேலும், மேற்படி உயர்கோபுர மின்விளக்குகள் பராமரிப்பு காலம் முடிவடைந்து சில மாதங்கள் ஆகிவிட்டபடியால், மேற்படி 15 இடங்களில் உள்ள உயர்கோபுர மின்விளக்குகள் பழுதுகள் சரிசெய்த மீண்டும் ஒளிர வைக்க ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி, செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், மேற்படி பணியன் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

15. ஆரணி நகராட்சி பிரதான சாலையான காந்தி ரோடில் மத்திய தடுப்பு சுவற்றில் இருபுறமும் உள்ள மின்விளக்குகள் பழுது ஏற்பட்டு சரிவர ஒளிரவில்லை. எனவே, மேற்படி, மின்விளக்குகள் பொது மக்கள் நலன் கருதி பழுதுகள் சரி செய்து மீண்டும் ஒளிரூட்ட ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ. 1.00இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி, செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். மேலும், மேற்படி பணியன் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

16. ஆரணி நகராட்சி பராமரிப்பில் உள்ள வெங்கட்ராமன் பூங்கா, பாஸ்கர் நகர் பூங்கா மற்றும் வீ.ஏ.கே நகர் பூங்கா ஆகியவைகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரிக்க சிமெண்ட் கான்கிரீட்டிலான தொட்டிகள் 02 வீதம் 6 எண்ணிக்கை அமைத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி, பணி தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் செயல்படுத்த வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. P. சந்திரசேகர் வசம் ஒப்படைப்பு செய்து பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 761/இ1/2018)

17. ஆரணி நகராட்சி வார்டு C, பிளாக் 7, நகரளவு எண் 4/3இல் நகராட்யின் பூங்கா இருந்து வந்தது. 1994 ஆம் வருடத்தில் மேற்காணும் நகரளவு எண்ணின் ஒரு பகுதியான 40,054 சதுர அடி இடம் தொலைபேசித்துறை அலுவலர் குடியிருப்பு கட்டிடம் கட்ட நில உரிமை மாற்றம் செய்ய ஆரணி நகராட்சியின் தீர்மானம் கோரப்பட்டுள்ளது. அப்போதய சூழ்நிலையை கருதி, அப்போதய தனிஅதிகாரி அவர்களால் தீர்மான எண் 371 நாள் 24.11.1994இல் இதற்கு ஆட்சேபனை இல்லா சான்று வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசின் அனுமதி கோர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 24 ஆண்டுகள் ஆன நிலையில் மேற்காணும் இடத்தில் யாதொரு அபிவிருத்தி பணிகளும் இது நாள் வரை செய்யப்படாமல் உபயோகமற்று காலி இடமாகவே இருந்து வருகிறது. தற்போது ஆரணி நகரம் வளர்ச்சி அடைந்துள்ள சூழ்நிலையில் நகராட்சியின் வளர்ச்சி பணிகளுக்காக இந்த இடம் தேவைப்படுகிறது. மேலும், பொது மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யும் தலையாய கடமை நகராட்சி நிர்வாகத்திற்கு உள்ளதை கருத்தில் கொண்டும், தொலைபேசித்துறை அலுவலர் குடியிருப்பு கட்டிடம் கட்ட மேற்காணும் இடம் ரீஅலினேசன் செய்யப்பட்டு 24 வருடங்கள் ஆகின்ற நிலையில், யாதொரு அபிவிருத்தி பணியும் செய்யப்படாமல், மேற்காணும் இடம் பயனற்று இருப்பதை கருத்தில் கொண்டும், மேற்காணும் இடத்தை ஆரணி நகராட்சிக்கு மறு நிலஉரிமை மாற்றம் செய்ய கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப நகர மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- தொலைபேசித்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய அளிக்கப்பட்ட ஆரணி நகராட்சி தீர்மான எண் 371, நாள் 24.11.1994 ஐ ரத்து செய்து ஆரணி நகராட்சி தீர்மான எண் 315, நாள் 11.01.1999 இல் ஏற்கனவே தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்காணும் இடத்தை நகராட்சி பெயருக்கு மறு நிலஉரிமை மாற்றம் செய்யக் கோரும் கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (கோப்பு எண் 1444 / எப்1 / 2018)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.